## 1.17 1997–98– சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் அண்ணா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நெடுந்தொலைவு கூர்உணர்வு நிலையம் மூலம் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீட்டில் வாய்ப்பு வள வரைபடம் (Resource Mapping of District) தயாரித்தல்

---

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண்.222 நாள் : 16.10.1998

பார்வை :

1. அரசாணை நிலை எண்.141, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 5.5.97
2. உறுப்பினர் செயலர், மாநில திட்டக்குழு நேர்முக கடிதம் எண். 2569/SFC/DP/97, நாள் 12.2.98

**ஆணை**

படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில், அனைத்து மாவட்டங்களிலும் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்க 1997–98ம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தில் சேர்த்து இத்திட்டத்திற்காக ரூ.20 இலட்சங்களுக்கு அனுமதி அளித்தும், இத்திட்டத்தினை மாநில திட்டக்குழு செயல்படுத்தவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. படிக்கப்பட்ட கடிதம் இரண்டில் மாநில திட்டக்குழு கீழ்க்கண்ட கருத்துருக்களை கூறி அவைகள் மீது ஆணைகள் பிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

1) மாவட்டங்களில் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கும் பணியை நெடுந்தொலைவு கூர்உணர்வு நிலையம் (Institute of Remote Sensing) அண்ணா பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கலாம்.
2) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியான ரூ.20 இலட்சத்தில் இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் தான் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்க இயலும். எனவே சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கும் பணியை தொடங்கலாம்.
3) மேற்கண்டவைகள் மீது ஆணைகள் வெளியிடப்படும் முன்பு வரைபடம் தயாரிக்கும் பணியை நெடுந்தொலைவு கூர்உணர்வு நிலையம் (Institute of Remote Sensing) அண்ணா பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்தமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

3, மாநில திட்டக்குழுவின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்த பின்னர் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

அ) 1997–98ம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்படி அனைத்து மாவட்டங்களுக்கும் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கப்படும் பணி எடுத்துக்கொள்ளப்படாமல் சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டும் இப்பணியை எடுத்துக் கொள்ளலாம். பகுதி–2 திட்டத்தின்படி அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ.20 இலட்சத்தை மேற்கண்ட இரண்டு மாவட்டங்களில் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கும் பணிக்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆ) சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மாவட்டங்களில் வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கும் பணி அண்ணா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நெடுந்தொலைவு கூர்உணர்வு நிலையம் (Institute of Remote Sensing) மூலம் செயல்படுத்தலாம். வாய்ப்பு வள வரைபடம் தயாரிக்கும் நெடுந்தொலைவு கூர்உணர்வு நிலையம், அண்ணா பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்த மாநில திட்டக் குழுவின் செய்கைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

இ) மேற்கண்ட பணி ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு அறிக்கைகள் / ஆவணங்கள் / கணிப்பொறி பிளாப்பி ஆகியவற்றை அரசுக்கு மாநில திட்டக்குழு அளிக்கவேண்டும்.

ஈ) மேற்கண்ட பணிகளுக்காக ஊரக வளர்ச்சி இயக்குநர் பற்றாளராக (Nodal Officer) நியமனம் செய்யப்படுகிறார்.

4. இவ்வரசாணை நிதித்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2795/PS/P/98 நாள் 27.07.98 ஒப்புதலோடு வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசுச் செயலாளர்